2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

செலவீனத் தலைப்பு இல. 215

உள்ளடக்கம்

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 01 -05

அத்தியாயம் 02- முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் 06 -10

அத்தியாயம் 03- வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை 11 - 22

அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள் 23

அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை 24

அத்தியாயம் 06- மனிதவள விவரம் 25 - 27

அத்தியாயம் 07- இணக்க அறிக்கை 28 - 40

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

இலங்கையில் தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சியானது, 1893ல் அரசாங்கத்தால் கொழும்பு, மருதானையில் புதுப்பிக்கப்பட்ட கோப்பி கடையில் நிறுவப்பட்ட முதலாவது தொழில்நுட்ப பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு 128 வருட சேவையை நிறைவு செய்துள்ளது. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், தொழில்நுட்பப் பாடசாலையின் நிறுவுகையுடன் உருவாக்கப்பட்டு இலங்கையின் கல்விச்சட்டத்தின் கீழ் இயங்கிவந்தநிலையில், 1994ல் தரம் 1 திணைக்களமாகத் தரமுயர்த்தப்பட்டது. தற்போது, இது திறன்கள் மேம்பாடு மற்றும் தொழிற்கல்வித்துறை, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழ் இயங்குகிறது. நாடளாவியரீதியில் 09 தொழிநுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகளின் வலையமைப்பானது, இளைஞர்களுக்கு நவீன தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கி நாட்டின் பல்வேறு தொழில் துறைகளில் தொழில்களுக்கு அமர்த்துகிறது. தேசியதொழிற்தகுதி நிலை மற்றும் சான்றிதழ் நிலை கொண்ட 100க்கும் மேற்பட்ட கற்கைகள் 19 வெவ்வேறு தொழில் துறைகளின் கீழ், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுகின்றன.

அனைத்துத் தொழில்நுட்பக்கல்லூரிகளும் தேசியதொழிற்தகுதி (NVQ) நிலை 3-4, மற்றும் தேசியதொழிற்தகுதியல்லாத (non-NVQ) அல்லாத கற்கைகளை நடத்துகின்றன. தகுதியுடைய மாணவர்கள், 09 மாகாணங்களிலும் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் தேசியதொழிற்தகுதி நிலை 05 (டிப்ளோமா) மற்றும் 06(உயர்டிப்ளோமா)நிலைக் கற்கைகளைப் பின்பற்றலாம். நாட்டின் தொழிற் தேவைப்பாட்டுக்கேற்ப, வெவ்வேறு தேசியதொழிற்தகுதி நிலைகளின் தகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தேசியதொழிற்தகுதி செயல்முறையானது பயிலுனர்களுக்கு அவர்களின் திறன்களை கைவினைஞர் நிலைக்கு மேம்படுத்த உதவுகிறது.

டிப்ளோமா மற்றும் உயர்டிப்ளோமா பெற்றவர்கள் தேசியதொழிற்தகுதி மட்டம் 7ஐப் பின்பற்ற வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் (UNIVOTEC) நுழையலாம். இளங்கலை தொழில்நுட்பம் அல்லது இளங்கலை கல்வி தொழில்நுட்ப பட்டம் பெற மாணவர்களை இது அனுமதிக்கும்.

இத்திணைக்களமானது, ஆட்டோமொபைல், பண்ணை இயந்திர தொழில்நுட்பம், உணவு தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம், மெகாட்ரானிக்ஸ், குளிர்பதனம் மற்றும் வளிசீராக்கல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, கட்டுமான தொழில்நுட்பம், வெல்டிங் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட தொழில்நுட்ப கற்கைகளை வழங்குகின்றது. இந்தக் கற்கைகள் தர உத்தரவாத அமைப்பின் கீழ் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மதிப்பீடுகள் மூலம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம் பெற்றவையாக உள்ளன.

புதிய தொழில்வாய்ப்பு சார்ந்த பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக அதிகரித்துவரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக பாடத்திட்டங்கள் காலத்துக்குக் காலம் உருவாக்கப்படுகின்றன, அதே நேரத்தில் தற்போதுள்ள பாடத்திட்டங்கள் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு தொடர்ந்து திருத்தப்படுவதுடன், நாட்டின் வளர்ச்சி இலக்குகளை அடைவதில் தொழில்துறையை முன்னோக்கி கொண்டு செல்லும் தகுதி வாய்ந்த முதுநிலைத்திறனாளர்/ கைவினைஞரை உருவாக்க இது உதவும்.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

சர்வதேசரீதியில் புகழ்பெற்ற, முன்னணி தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வழங்குநராக விளங்குதல்.

இலக்கு

தேசிய மற்றும் சர்வதேசரீதியில் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வழங்குநராக செயல்படுதல்

குறிக்கோள்கள்

•பாடசாலை விலகுவோர் மற்றும் பணியாளர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி வழங்குதல்

•தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி மூலம் பட்டப்படிப்பிற்கான பாதையை உருவாக்குதல்

•நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மனித மூலதனத்தை வழங்குதல்

•சுயதொழில் மற்றும் தொழில் துறைக்கு வழிவகுக்கும் திறன்களை வழங்குதல்

•க.பொ.த. உயர்தர தொழில்நுட்பப்பிரிவு மாணவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல்

1.3 செயல்பாடுகள்

- தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொடர்புடைய பயிற்சித் திட்டத்தைக் கண்டறிதல், தயாரித்தல், செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல், மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு.

- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியை அதிக உற்பத்தித்திறன் மற்றும் திறமையானதாக மாற்றுவதற்குத் தேவையான மனித வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி.


- தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஆராய்ச்சி நடத்துதல்.

- தொழில்நுட்பக் கல்வித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகுதி (NVQ) கட்டமைப்பின்படி கற்கைகளை செயல்படுத்துதல்.

- தொழில் வழிகாட்டுதல் மற்றும் தொழில்முனைவு அபிவிருத்திக்காக தனியார் மற்றும் பொதுத்துறையுடன் ஒருங்கிணைப்பு

1.4 திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு

இணைப்பு 01



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- நிர்வாகப் பிரிவு
- கல்விப் பிரிவு
- பரீட்சித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
- தொழில் வழிகாட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு
- உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு
- பராமரிப்புப் பிரிவு
- தகவல் தொகுதி முகாமைத்துவப் பிரிவு
- திட்டமிடல் பிரிவு
- தொழிநுட்பசார்பு சேவைகள் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு

1.6 திணைக்களத்தின் கீழ்வரும் பயிற்சி மையங்கள்

தொழில்நுட்பவியல் கல்லூரிகள் - 09

தொழில்நுட்பக் கல்லூரிகள் - 30

1.7 தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித்திணைக்களத்தின் கீழ்வரும் நிதிகள்

இத்திணைக்களமானது தனது செயல்பாடுகளை அமுல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் வெவ்வேறு நிதிமூலங்களிலிருந்து 03 தொடர் வாக்குகளில் நிதியைப் பெற்றது


நிதிமூலம்	நிதி ஒதுக்கு	பெறக்கூடிய நிதி	31.12.2021 அன்று செலவீனம்	முன்னேற்றம் (%)	
	(ரூபா. மில்)			நிதி	பௌதீக
திரட்டிய நிதியம்					
மூலதனம்	542.70	349.86	277.49	80	95
மீண்டெழும் செலவீனம்	2387.40		1808.23	85	100
திறன் பிரிவு அபிவிருத்திச் செயற்றிட்டம் (SSDP)	8.50		7.42	87	90
பௌதீக வளங்கள் அபிவிருத்திச்செயற்றிட்டம்	76.15		48.12	63	80
	100.73		37.58		
மொத்தம்	**3115.20**		**2178.86**		

1.7.1 வெளிநாட்டு நிதிமூலங்களிலான செயற்றிட்டங்கள்

கொரியன் சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனம் (KOICA) 4.0 மில்லியன் அ.டொலர் நிதியுதவியுடன் (2021-2024) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சியில் (TVET) கட்டிடம் மற்றும் நிர்மாணப் பாடநெறிகளை வலுப்படுத்துவதறகு முன்மொழியப்பட்ட செயற்திட்டத்தை அடையாளம் காணப்பட்ட மையங்களான மருதானை மற்றும் இரத்தினபுரி தொழில்நுட்பக் கல்லூரிகள் இரத்மலானை மற்றும் மாத்தறை. தொழில்நுட்பவியல்கல்லூரிகளில் KOICAவினால் நடைமுறைப்படுத்தல் கணக்கெடுப்பு நிறைவடைந்துள்ளது மற்றும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான கலந்துரையாடல் பதிவு KOICA மற்றும் இலங்கையின் தொடர்புடைய தரப்பினரால் கையெழுத்திடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் அமைவிடங்கள்

மாகாணம்	அமைவிடம்
மேல்	இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி கொழும்பு (மருதானை)
	தொழில்நுட்பக் கல்லூரி - கம்பகா
	தொழில்நுட்பக் கல்லூரி - ஹோமாகம
	தொழில்நுட்பக் கல்லூரி - களுத்துறை
	தொழில்நுட்பக் கல்லூரி - இரத்மலானை
தென்	தொழில்நுட்பவியல் கல்லூரி - காலி
	தொழில்நுட்பக் கல்லூரி - பலப்பிட்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - பெலியத்தை
	தொழில்நுட்பக் கல்லூரி - மாத்தறை
	தொழில்நுட்பக் கல்லூரி - வீரவில
சபரகமுவ	தொழில்நுட்பவியல் கல்லூரி - இரத்தினபுரி
	தொழில்நுட்பக் கல்லூரி - எம்பிலிப்பிட்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - கேகாலை
	தொழில்நுட்பக் கல்லூரி - வரக்காபொலை
ஊவா	தொழில்நுட்பவியல் கல்லூரி -பதுளை
	தொழில்நுட்பக் கல்லூரி - பண்டாரவலை
	தொழில்நுட்பக் கல்லூரி - மெதகம
	தொழில்நுட்பக் கல்லூரி - மொனராகலை
கிழக்கு	தொழில்நுட்பவியல் கல்லூரி -அம்பாறை
	தொழில்நுட்பக் கல்லூரி - அக்கரைப்பற்று
	தொழில்நுட்பக் கல்லூரி - மட்டக்களப்பு
	தொழில்நுட்பக் கல்லூரி - தெகியத்தகண்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - சம்மாந்துறை
	தொழில்நுட்பக் கல்லூரி - திருகோணமலை
மத்திய	தொழில்நுட்பவியல் கல்லூரி - கண்டி
	தொழில்நுட்பக் கல்லூரி - தம்புள்ளை
	தொழில்நுட்பக் கல்லூரி - ஹசலக
	தொழில்நுட்பக் கல்லூரி - மாத்தளை
	தொழில்நுட்பக் கல்லூரி - நுவரெலியா
	தொழில்நுட்பக் கல்லூரி - பாததும்பரை
வடமத்திய	தொழில்நுட்பவியல் கல்லூரி - அநுராதபுரம்
	தொழில்நுட்பக் கல்லூரி - பொலனறுவை
வடமேல்	தொழில்நுட்பவியல் கல்லூரி - குருணாகலை
	தொழில்நுட்பக் கல்லூரி - ஆனமடுவை
	தொழில்நுட்பக் கல்லூரி - குளியாப்பிட்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - வாரியப்பொல
வடக்கு	தொழில்நுட்பவியல் கல்லூரி - யாழ்ப்பாணம்
	தொழில்நுட்பக் கல்லூரி - வவுனியா
	தொழில்நுட்பக் கல்லூரி - மன்னார்



அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1. 2021 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

17 தொழில் துறைகளின் கீழ் நடத்தப்படும் 121 பாடப்பிரிவுகளுக்கு 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 31 டிசம்பர் 2021 அன்று 25,750 மாணவர்களின் சேர்க்கையுடன் முன்னைய ஆண்டுகளில் இருந்து 10,037 மாணவர்களுமாக மொத்தம் 35,787 மாணவர்கள் 2021 இல் பயிற்சி பெற்றுள்ளனர். சுமார் 41சதவீத பெண் மாணவர்கள் 39 கல்லூரிகளில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியில் ஈடுபட்டுள்ளனர்.

இல	தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள தொழிற்றுறையின் பெயர்	2021 அனுமதி	முன்னைய ஆண்டுகளின் சேர்க்கை	13ம் வருட சேர்க்கை	மொத்த சேர்க்கை
1	விவசாயத் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடைகள்	1521	553	68	**2074**
2	வாகன பழுது மற்றும் பராமரிப்பு	2785	1383	454	4168
3	கட்டிடம் மற்றும் கட்டுமானம்	8009	4053	65	12062
4	மின்சாரம், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு	2283	1441	95	3724
5	நிதி வங்கி மற்றும் முகாமைத்துவம்	1782	491		2273
6	உணவுத் தொழில்நுட்பம்	154	96		250
7	இரத்தினம் மற்றும் நகைத் தொழில்	43	4		47
8	ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை	129		7	129
9	தகவல் தொடர்பு மற்றும் பல்லூடகத் தொழில்நுட்பம்	3630	806	149	4436
10	மொழிகள்	2291	12		2303
11	தோல் மற்றும் காலணி	22			22
12	இயந்திரவியல் தொழில்நுட்பம்	292	197		489
13	உலோகம் மற்றும் இலகு பொறியியல்	814	90	5	904
14	அலுவலக நிர்வாகம்	987			987
15	குளிர்பதனம் மற்றும் வளிச்சீராக்கம்	719	40	32	759
16	புடவைத் தொழில் மற்றும் தைத்தஆடைகள்	196	65		261
17	மரவேலைகள்	93			93
	மொத்தம்	**25750**	**10037**	**1024**	**35787**

- கோவிட்-19 தொற்றுநோய்க் காலகட்டத்தில் 39 கல்லூரிகளிலும் மின்வழிக்கற்றல் எனும் நிகழ்நிலை பயிற்சித் திட்டங்களைத் தொடர்ந்தபோது 1130 திட்டங்களில் 14,197 மாணவர்கள் பங்கேற்றனர்.
- 13 வருடங்கள் தொடர்ச்சியான கல்வித் திட்டத்திற்கு அமைய 2021 இல் பல்வேறு தொழிற்பயிற்சிகளின் கீழ் 1024 மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.
- பாடநெறிகளை வெற்றிகரமாக முடித்த பயிற்சியாளர்களுக்கு 3655 NVQ சான்றிதழ்கள் மற்றும் 16,134 NVQஅல்லாத சான்றிதழ்கள் உட்பட 19,789 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

- 2021 வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 'நிபுணதா சிசு சவிய' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் விசேட தொழிற்கற்கைகளுக்கு 4358 மாணவர்களை உள்வாங்குவதற்காக ரூ.27.8 மில்லியன் (மாதம் ரூ.4000) செலுத்தப்பட்டது. மேலும், மாணவர் நலன்சார்துணைத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாணவர் உதவிப்பணம், மற்றும் பருவகாலச்சீட்டு என்பவற்றிற்கு ரூ.25.796 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

- திறன்கள் விருத்தி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரியில் ''ஆட்டோ கலர் தொழிநுட்பவியல்'' எனும் புதிய கற்கையானது ரூ. 1.45 மில்லியன் நிதி வழங்கப்பட்டது. இத்திணைக்களத்துடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி கலர் கலவை இயந்திரத்தை வழங்க அக்ஸோனோபெல் கலர் நிறுவனம் உதவி அளித்துள்ளது. 20 மாணவர்கள் கொள்ளளவுடன் சகல வசதிகளும் கொண்ட இப்பயற்சியலகில் கூடிய சம்பளம் பெறக்கூடியவகையிலான தொழிலில் அமரும்படியான பயிற்சியைப் பெற முடியும்.

- புத்தளம் ஆனமடுவவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி 2021.02.11ஆம் திகதி மாணவர்களுக்காகத் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. வகுப்பறைகள், பணிமனைகளுக்கான மூன்று மாடி மற்றும் இரண்டு மாடி - கணினி ஆய்வகம், நிர்வாகப்பிரிவு, பணியாளர்கள் குடியிருப்பு மற்றும் குடிநீர்விநியோகம் கொண்ட உள்கட்டமைப்பு வசதிகள் உட்பட்ட மேம்படுத்தப்பட்ட கட்டிடத்தொகுதிகளை நிர்மாணிக்க ரூ.420 மில்லியன் செலவிடப்பட்டது. புத்தள மாவட்டத்தில் தொழில்துறைத் தேவைக்கேற்றவகையில் பல புதியபாடநெறிகளை தொழில்நுட்பக்கல்லூரி ஆரம்பித்துள்ளது.

- தொழிற்கல்வி ஊக்குவிப்பு விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 14 தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும், பட்டறைகள் மற்றும் வகுப்பறைகளுக்கான உபகரணங்களை வழங்குவதன் மூலம் உருவாக்கப்பட்டன. அனைத்துத் தொடர் திட்டங்களும் முடிக்கப்படுவதற்கு ரூ. 120.39 மில்லியன் செலவானது.

- 2021 இல் தொழிற்கல்வி ஊக்குவிப்பு மற்றும் பௌதீகவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 15 தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 2 தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் 32 திட்டங்களுக்கு ரூ.106 மில்லியன் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு முடிக்கப்பட்டன.

  இதன் கீழ், ரூ. 57.4 மில்லியன் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதற்கும், ஏற்கனவே உள்ள கற்கைகளை மேம்படுத்துவதற்கும் அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரிகளில், 2022 ஆம் ஆண்டு, புதிய கற்கைகள் தொடங்கப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 48.778 மில்லியன் ஆனது மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் திருத்தம், சூரிய ஒளிமின்னழுத்த தொழிநுட்பவியல், வாகன மின்னியல் தொழிநுட்பவியல், வாகன தீந்தை பூசுதல், மற்றும் வாகன ஓட்டுவேலை, வீட்டுமின்னியல், உருக்கிணைப்பு வேலை, கணணி வன்பொருள், கட்டிட கைவினை, மேசன், சமையற்கலை மற்றும் பேக்கரி, குழாய்நுட்பம் மற்றும் மர வேலைகள் உள்ளிட்ட கற்கைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கச் செலவிடப்பட்டது.

- வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு 2021, ''டெக் உதானா'' திட்டத்தின் கீழ், தொழில்நுட்பக் கல்லூரிகளின் பயிற்சித்திறனை அதிகபட்ச நிலைக்கு உயர்த்துவதற்காக, தனித்துவமான மற்றும் கவர்ச்சிகரமான கட்டடக்கலை வடிவமைப்பில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவை, குருநாகல்(ரூ. 200மி.), கண்டி(ரூ.205மி.) , மருதானை(ரூ.200மி.) ஆகிய தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும், ஹோமாகம(ரூ.143மி.),

தம்புள்ளை(ரூ.48மி.), மாத்தறை(ரூ.57.35மி.) ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அனைத்து திட்டங்களுக்கும் இவ்வாண்டில் (2021) பகுதி கொடுப்பனவுகள் செய்யப்பட்டு 2022 இல் நிறைவு செய்யப்படும்.

- வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் கீழ், குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாய உற்பத்தி தொழில்நுட்ப பாடநெறி மாணவர்களுக்கு கவர்ச்சிகரமான செய்முறைப்பயிற்சி சூழலை வழங்குவதற்காக நவீன தொழில்நுட்ப விவசாயப்பண்ணை அலகு ஒன்றை ஆரம்பிப்பதற்கான முன்னேற்றங்கள் தொடர்கின்றன. அதே நேரத்தில், தற்போதுள்ள பேக்கரி மற்றும் குக்கரி படிப்புகள் முழு வசதிகளுடன் கூடிய பயிற்சி சமையலறைப் பிரிவை நிறுவுவதன் மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- திறன்விருத்தி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், இரத்தினபுரி, காலி மற்றும் கண்டி ஆகிய தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடத்தப்படும் வாயு மற்றும் மின்பாய்ச்சி உருக்கியிணைத்தல், குளிர்பதனம் மற்றும் வளிச்சீராக்கம், உணவு தொழில்நுட்பம் மற்றும் தொழிற்சாலை மின்னியல் ஆகிய தொழிற்கற்கைகளுக்கான மேம்படுத்துவதற்காக அத்தியாவசிய உபகரணங்களை ரூ. 3.50 மில்லியன் மதிப்பில் வாங்கப்பட்டது.

- மருதானை, இரத்தினபுரி ஆகிய தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் இரத்மலானை, மாத்தறை ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன கொரிய அரசாங்கத்தின் (KOICA) மானியத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்டன. இதன் மதிப்பீடு அ.டொலர் 4.00 மில்லியன் கட்டுமானத் தொழில்நுட்பக் கற்கைகளை மேம்படுத்த வரைவு தொழில்நுட்பம், வரைவு திறன் மற்றும் தொழில்துறை பிளம்பிங். திட்டங்களை செயல்படுத்துவதற்கான அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டு, கலந்துரையாடல் பதிவு (Record of Discussion) ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. இத்திட்ட நடவடிக்கைகள் 2022 முதல் தொடங்கப்படும்.

- ஆண்டின் முதல் காலாண்டில், இலக்குக் குழுக்களுக்கு தொழில் பயிற்சி வகுப்புகள் மற்றும் கல்லூரி அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 84 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், 10 சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்களும் (SEPI) நடத்தப்பட்டன. இத்திணைக்களமும் பொது விழிப்புணர்வு திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

- வரக்காப்பொல மற்றும் வீரவில தொழில்நுட்பக் கல்லூரிகளில் அடையாளம் காணப்பட்ட இரண்டு சுயதொழில் முயற்சியாளர்களுக்கு இரண்டு SEPI கடன்கள் வழங்கப்பட்டன.

- சர்வதேச இளைஞர் திறன்கள் தினத்தையொட்டி, சூம் தளம் மூலம் தொடர்புடைய துறைசார் நிபுணர்களின் பங்கேற்புடன் வெபினார் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்நிலை பட்டறைகளின் நோக்கம் ஆனது அலுமினியம் கட்டுருவாக்கம், வாகன ஒட்டுவேலை, பேஸ்ட்ரி மற்றும் விருந்தோம்பல் போன்ற தொழில்சார் பயிற்சி வகுப்புகளை மேம்படுத்துவதாகும்.

- 106 கல்விசார் மற்றும் 75 கல்விசாரா உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 10 பயிற்சி நிகழ்ச்சிகள் ரூ0.244 மில்லியன் செலவில் நடாத்தப்பட்டன. பயிற்சிப் பிரிவு மற்றும் திணைக்கள அதிகாரிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சித் திட்டம் ஒன்று, கோவிட் 19 தொற்றுநோய் காரணமான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்கவில்லை. 2021 ஆம் ஆண்டில் CPSC ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட 25 நிகழ்நிலை பயிற்சித் திட்டங்களில் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் கல்லூரிகளிலிருந்து பங்கேற்றனர்.

- கல்வி நிறுவனத்தின் தரத்தைப் பராமரிக்க 39 கல்லூரிகளிலும் QMS தொடர்ந்து புதுப்பிகக்ப்படுகின்றன. 35 கல்லூரிகள் QIS தரச்சான்றிதழைப் பெற்றும் 04 கல்லூரிகள் QIS நட்சத்திரச் சான்றிதழைப் பெறுவதற்குத் தயாராசின்றன.

2.2. 2022 ஆம் ஆண்டிற்கானஇலக்குகள் மற்றும் எதிர்கால நோக்கு

1. 2022 ஆம் ஆண்டிற்கு 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகளில் 18 வெவ்வேறு துறைகளின் கீழ் 117 பாடநெறிகளுக்கு 32000 மாணவர்களை உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் 39 கல்லூரிகளில் 38 NVQ 5/6 டிப்ளோமா கற்கைகள் மற்றும் 74 NVQ அல்லாத 3/4 கற்கைகள உட்பட 900 கற்றற் திட்டங்களை நடத்த எதிர்பார்க்கப்படுகிறது..

2. நிகழ்நிலை கல்வி முறையை வலுப்படுத்தும் வகையில், அனைத்து தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கற்றல் உதவிகளை வழங்கவும், இணையவழிக் கற்றல் முறையை மேலும் பிரபலப்படுத்தவும் இணையவழி வழங்குகைக்கு ஏற்றவாறு அனைத்து பாடத்திட்டங்களுக்குரிய கற்பித்தல் மாதிரிகளைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

3. கல்விப் பணியாளர்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப 38 செய்துகாட்டுநர்களை நியமிக்க எதிர்பார்க்கப்படுகிறது. விண்ணப்பங்கள் ஏற்கனவே 2021 இல் கோரப்பட்டன. 2022 இல் ஆட்சேர்ப்பை விரைவுபடுத்த போட்டித் தேர்வுகள் முடிந்தவரை நடத்தப்படும். மேலும், காலியிடங்களை நிரப்புவதற்கு 100 எண்ணிக்கையிலான பயிற்றுவிப்பாளர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

4. 2022 ஆம் ஆண்டில் பயிற்சியை முடிக்கும் மாணவர்களுக்கு 9500 NVQ 3/4 மற்றும் ஏஞ 5/6 சான்றிதழ்கள் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு 12400 சான்றிதழ்கள் உட்பட 21900 சான்றிதழ்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

5. நாட்டில் கோவிட் 19 நிலைமை காரணமாக டிப்ளோமா வழங்கும் விழா நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், 2019 ஆம் ஆண்டில் தகுதி வாய்ந்த 1395 டிப்ளோமா விருது பெற்றவர்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

6. 2022 ஆம் ஆண்டிற்குள் 27 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 20 புதிய பாடத்திட்டங்களைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பயிற்சி உபகரணங்களை வாங்குவது தொழிற்கல்வி மேம்படுத்தல் திட்டத்திற்கு இணையாக புதிய பாடத்திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகன தீந்தை பூசுதல், வாகன வளிச்சீராக்கம், அலுமினியம் கட்டுருவாக்கம், வாகன ஒட்டுவேலை, மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் திருத்தம், சூரியகல தொழிநுட்பம், வாயு மற்றும் மின்பாய்ச்சி உருக்கியிணைத்தல், பற்றிக், பேக்கரி மற்றும் சமையற்கலை, மற்றும் உருக்கு தளபாட உற்பத்தி போன்றவை சந்தையில் அதிக வேலைவாய்ப்பு தேவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

7. 'டெக் உதான' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், குருநாகல், கண்டி, மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் ஹோமாகம, தம்புள்ளை மற்றும் மாத்தறை ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகள்

நவீனமயப்படுத்தப்பட்டு, அவை தனித்துவமான கட்டடக்கலை வடிவமைப்பிற்கு புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்படுகின்றன. அதிகூடிய ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஏற்றவகையில் மிகவும் கவர்ச்சிகரமான பயிற்சி மையங்களாக மாற்றவும், விரிவாக்கப்பட்ட வசதிகளுடன் அனைத்து வேலைகளையும் முடிவுறுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

8. கட்டுமானத் துறையில் கற்கைகளை மேம்படுத்த கொரியா அரசாங்கத்தின் (KOICA) உதவியுடன் செயல்படுத்தப்படும் மானியத் திட்டம் ஆனது திட்டகால வரையறையின்படி, 2022 ஆம் ஆண்டில், மருதானை, மற்றும் இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரிகள், இரத்மலானை மற்றும் மாத்தறை ஆகிய தொழில்நுட்பக் கல்லூரிகளில், உபகரணங்கள் வழங்கல், தற்போதுள்ள பட்டறைகள், மற்றும் பாடத்திட்டங்களை மேம்படுத்துதல் எனபவற்றுடன் அடையாளம் காணப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாடு ஆனது 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரைவு தொழில்நுட்பம், வரைவுத்திறன் மற்றும் தொழில்துறை குழாய் பொருத்துதல், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி மூலோபாய அபிவிருத்தி மற்றும் தொழில் கூட்டுறவு ஆகிய விடயங்கள், திட்ட அமுலாக்கம் மற்றும் முகாமைத்துவம் சார் சிறப்பு கொரிய நிபுணர் குழுவால் செய்யப்படும். இந்த செயற்றிட்டம் 2021-2024 காலப்பகுதியில் அமுலாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

9. மருதானை, இரத்தினபுரி, இரத்மலானை மற்றும் மாத்தறை கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட KOICA நிதியுதவி திட்டத்தின் மூலம் கணணியுதவி வடிவமைப்பு மற்றும் வரைதல், மற்றும் தொழில்துறை குழாய்கள் பட்டறைகளின் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் NVQ 4 வரைவுத்திறன், தொழில்துறை குழாய் பொருத்துதல், மற்றும் NVQ 5 வரைவு தொழில்நுட்பம் ஆகிய பாடத்திட்டங்களை அதிகூடிய பயிற்சித்திறனுடன் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

10. 2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட முன்மொழிவுகளின் கீழ் முன்னுரிமையளிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் குளியாப்பிட்டி, இரத்மலானை, பதுளை, எம்பிலிப்பிட்டிய மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கல்லூரிகள் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


11. ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனம் மற்றும் 'பிட்சா ஹட்' போன்ற சர்வதேச நிதிகளின் உதவித் திட்டங்களுடன் மின்னியல், மற்றும் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை கற்கைகள் விரிவாக்கப்படவும் மற்றும் மேம்படுத்தப்படவும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

12. தொழில்நுட்பக் கல்லூரிகள் வலையமைப்பில் வழங்கப்படும் NVQ 4 நிலை தொழிற்கற்கைகளுக்கு அதிகமான மாணவர்களை ஈர்க்கும் வகையில், ஸ்ரீலங்கா டெலிகொம் ஊடாக சமூக ஊடக ஊக்குவிப்புகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் 03

2021ம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று



ஏசீஏ- எப்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	2020	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,920,750,000	1,981,640,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		263,046,547	187,392,586	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		50,910,534	32,568,117	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		2,234,707,081	2,201,600,703	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		2,234,707,081	2,201,600,703	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		2,234,707,081	2,201,600,703	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
1,992,500,000.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	1,579,526,764	1,675,608,197	
285,150,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	195,286,927	221,711,420	ஏசீஏ-2(ii)
109,750,000.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	34,095,848	85,312,200	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	424,883	
2,387,400,000.00	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		1,808,909,539	1,983,056,700	
	மூலதனம் செலவினம்				
182,200,000.00	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	99,843,846	23,512,989	
338,000,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	170,242,765	129,693,700	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
22,500,000.00	திறன் விருத்தி	14	7,397,809	2,368,806	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
542,700,000.00	மொத்த மூலதனம் செலவினம் (எ)		277,484,420	155,575,495	
	வைப்புக் கொடுப்பனவுகள்		216,595,373	189,331,855	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		53,324,104	28,289,056	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		269,919,477	217,620,911	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		2,356,313,436	2,356,253,106	
2,930,100,000.00	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(121,606,354)	(154,652,403)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(121,606,356)	(154,652,403)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	8,488,861,066	6,387,040,128
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	113,827,039	111,413,468
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**8,602,688,105**	**6,498,453,596**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		5,113,086	49,150,689
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		8,488,861,066	6,387,040,128
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	108,713,953	62,262,779
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**8,602,688,105**	**6,498,453,596**

பக்க இலக்கம் 07 முதல் 65 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 66 முதல் 107 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	
திகதி : 2022. 03. 30	திகதி : 2022. 03. 30	திகதி : 2022. 03. 30

Deepa Liyanage
Secretary
State Ministry of Skills Development,
Vocational Education, Research & Innovation

S.C. Jagath
Director General
Department of Technical Education & Training
P.O. Box : 557, Olcott Mawatha, Colombo 10.

B.A.P.P. Chithrananda Bamunuarach
Chief Accountant
Department of Technical Education & Trai
Olcott Mawatha, Colombo 10.

2

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2021 ரூபா	2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்		
வருமானம் அல்லாத பெறுகைகள்	123,257,357	126,113,816
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்		
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,920,750,000	1,981,640,000
முற்பணங்களை அறவிடல்	52,018,908	40,635,930
வைப்புக்களின் பெறுகை	263,046,547	187,392,586
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,359,072,812**	**2,335,782,332**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,774,167,996	1,870,243,495
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	34,095,848	85,737,083
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,638,532	6,840,252
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்		-
முற்பணக் கொடுப்பனவு	53,090,642	28,054,152
வைப்புக் கொடுப்பனவு	216,595,373	189,331,855
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,081,588,391**	**2,180,206,837**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**277,484,421**	**155,575,495**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	277,484,421	155,575,495
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**277,484,421**	**155,575,495**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(277,484,421)**	**(155,575,495)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

2021 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) நிதிக் கூற்றுக்களுக்கான படிவங்களில் மாற்றங்களும் ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களை சரிசெய்தலும்

2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

6

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை - பொருத்தமற்றது

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

வாக்கு விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 2021 (ரூ. மில்)	கிடைக்கக்கூடிய ஒதுக்கீடு (ரூ. மில்)	செலவு 31.12.2021 (ரூ. மில்)	நிதி முன்னேற்றம் –சதவீதம்	பௌதீக முன்னேற்றம் –சதவீதம்
மூலதனம்	**542.700**	**358.335**	**277.491**	**77**	**80**
கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	310.000	221.911	185.315	84	85
தொழிற்கூட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	83.000	83.000	56.821	68	70
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	40.000	26.670	15.532	58	65
தொழிற்கூடதடுப்பு பராமரிப்பு, இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	16.000	11.940	8.034	67	70
வாகனங்களுக்கான தடுப்பு பராமரிப்புசேவைகள்,	6.200	4.633	4.392	95	96
மனித வளம் மற்றும்அபிவிருத்தி	22.500	10.181	7.397	73	75
குத்தகை நிதியின் கீழ் வாகனங்களுக்கான மூலதனச் செலவீனம்	65.000	0.000	0.000		
மீண்டெழும்		**2387.40**	**1808.23**	**85**	**100**

3.7 பொருத்தமற்றது

3.8 பொருத்தமற்றது

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தமிழாக்கம்

வீஓடீ/ஈ/டீரீஈரீ/2021/எவ்ஏ/18 2022 யூன் 22 திகதி

பணிப்பாளர் நாயகம்,
அரச கணக்குகள் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிரித்து, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கமைய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையாகவும் நியாயமானதுமான நிலைமைகளையும் புலப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் கால அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகைகளில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்ல தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) 1.6.1.1 மற்றும் 1.6.2.1 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நீங்கலாக, நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) 3.1(அ) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நீங்கலாக, முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

1.6 நிதிகூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

1.6.1.1 ஆரம்ப மீதிகளில் வேறுபாடுகள் நிலவுகின்றமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த வருடத்தில் காசாக தீர்க்கப்பட்ட முற்பண பெறுவனவுகளின் கூட்டுத்தொகையை உள்ளடக்கியிராத காரணத்தினால் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முற்பண பெறுவனவுகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி மற்றும் கடந்த வருடத்தின் முற்பணக் கணக்கின் பிரகாரம் அந்த பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,326,759 ஆன வேறுபாடொன்று நிலவியது.

1.6.2 நிதி நிலைமைக் கூற்று

1.6.2.1 ஆரம்ப மீதிகளில் வேறுபாடுகள் நிலவியமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டில் நிதி நிலைமைக் கூற்றில் ஆரம்ப மீதிகளை ஒப்பிடும் போது குறுக்குப் பதிவுகளின் மீதி முற்பணக் கணக்கு மீதியினுள் உள்ளடக்கப்பட்டிராமையால் முற்பணக் கணக்கின் ரூபா 6,975,956 ஆன வேறுபாடு மற்றும் திறைசேரியின் பதிப்புக்களில் தேறிய சொத்துக்களில் ரூபா 6,975,956 ஆன வேறுபாடொன்று நிலவியது.

1.6.2.2 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிநிலைமைக் கூற்றின் மீதி மற்றும் 2021 சனவரி 01 ஆந் திகதியில் அக்கூற்றின் ஆரம்ப மீதி ஆகியவற்றை ஒப்பிடும் போது 2020 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட போதிலும் சிகாஸ் கணனி பதிவில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருந்தமையால் ஏற்பட்ட இனங்காணப்பட்ட தவறான பதிவு காரணமாக சொத்து வகை 8 இன் ரூபா 1,230,892,660 ஆன வேறுபாடொன்று நிலவியது.

1.6.2.3 வைப்புக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் 03 வைப்புக் கணக்குகளின் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளபடியாக 2 வருடங்களை கடந்த ரூபா 23,511,236 ஆன வைப்புக்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571(3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய 2015-2018 காலப்பகுதிக்குரிய ரூபா 54,680 ஆன தொகை குறித்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) வழங்கப்பட்ட போதிலும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தினுள் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,099,174 உடைய 03 காசோலைகள் 2015 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) 2018 சனவரி முதல் இனங்காணப்படாத பெறுவனவுகள் குறித்த 5 சந்தர்ப்பங்களில் ரூபா 232,560 கூட்டுத் தொகை மற்றும் 2019 திசெம்பர் முதல் வங்கியிலிடப்பட்ட போதிலும் வழங்கப்படாத ரூபா 29,800 பெறுமதியான 02 காசோலைகள் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 110 பிரகாரம் தயாரிக்கப்பட்ட நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

2. நிதிமீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதியேற்பாட்டிலான சேமிப்பு

திணைக்களத்தினால் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்ட 22 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 196,851,945 ஆகும்.

2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் செயற்படாத காரணத்தினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 39 சந்தர்ப்பங்களுக்குரியதாக ரூபா 5,555,206 ஆன பொறுப்புக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் 26 செலவின விடயங்களில் காண்பிக்கப்படும் மீதிகள் திறைசேரி கணனி அச்சீட்டில் (ளுயு92) காண்பிக்கப்படும் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 60 முதல் ரூபா 5,385,472 வரையான வீச்சில் வேறுபாடுகள் நிலவின.

(இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 04 செலவின விடயங்களின் சேமிப்பினை விஞ்சி ரூபா 6,205,441 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தன.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் ∴. கட்டளைகளுடனான தொடர்பு	அவதானிப்புக்கள்
2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30.∴2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	
(ஸ) 3.1 ஆம் பிரிவு	தலைமை அலுவலகத்திற்கு சொந்ததமான 13 வாகனங்கள் மற்றும் தொழில்நுட்ப / கைத்தொழில் கல்லூரிகள் 17 இல் காணப்பட்ட 20 வாகனங்களுக்காக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஸை) 5.1 ஆம் பிரிவு	வாகன சம்பவக் குறிப்பு புத்தகத்தில் மாதாந்த ஓட்டப் பொழிப்பு நாளதுவரையாக்கப்படாத 16 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் யப்பானில் இடம்பெற்ற கைத்தொழில் பயிற்சி மதியுரையாளர்களின் இயலளவு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்குபற்றுவதற்கு இயலுமையற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு வெளிநாடு செல்ல நேர்ந்தமையால் ஏற்பட்ட தவறுக்கும் இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக உத்தியோகத்தர் ஒருவரை தெரிவு செய்யும் போது தாபன விதிக்கோவையின் ஓஏ அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு மீறப்படும் வகையில் தவறாக உத்தியோகத்தரை தெரிவு செய்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல், அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு இடமளித்தமை மற்றும் கவனயீனமாக அரச சேவைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பில் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி) மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக்கோவையின் ஓடுஏஐஐஐ ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்கு 2018 நவம்பர் 24 ஆந்

திகதி ஆரம்ப விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 22 ஆந் திகதி வரையிலும் அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 முற்பண தீர்த்தல் கணக்கு

அரசின் அமைச்சு ∴ திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணிவறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள, சேவையை முடிவுறுத்திய 81 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,443,564 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 144,200 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (எனை) இல் அந்த பெறுமதி ரூபா 125,800 ஆக அதாவது ரூபா 18,400 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை வங்கியின் ஆணமடு கிளையின் கணக்கில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் 06 மாதங்களை விஞ்சி சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 249?862 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (எனை) பிரகாரம் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் கீழ் உள்ள மீதியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(இ) பிரகாரம் தலைமை அலுவலகம் மற்றும் 15 தொழில்நுட்ப ∴ கைத்தொழில் கல்லூரிகளின் வெளியிடப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 646,390 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தலைமை அலுவலகத்திற்குரிய கணக்கிற்கு உரியதாக வங்கி இணக்கக் கூற்றில் 06 மாதங்களை விஞ்சிய தீர்வையாகாத வைப்புக்களாக ரூபா 349,060 பெறுமதியான இரு காசோலைகள் காணப்பட்டமையும் 2021 சனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் ரூபா 8,980,552 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2019 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்ட கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய 2922 வகையான சொத்துக்கள் மற்றும் விற்பனைக்காக பதிவு செய்யப்பட்டிருந்த 5432 வகையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் 06 இன் 16 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

3.2 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881(ை) பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் மற்றும் கைத்தொழில் ∴ தொழில்நுட்ப கல்லூரிகளில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அப்பதவிகளில் நியமிக்கப்பட்ட திகதி முதல் 2 மாதங்களினுள் பிணை வழங்க வேண்டிய போதிலும் எந்தவொரு உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டில் காணப்படும் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் இடம்பெற்ற 08 ஆதன நட்டங்கள் மற்றும் 03 வாகன விபத்துக்களின் கூட்டுப்பெறுமதியான ரூபா 171,063 தொகை நிதிக்கூற்றுக்களில் புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நட்டங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள 12 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்கள் தொடர்பான பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 4,510,469 பெறுமதியான நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 103(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது.

3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015-2019 காலத்தில் 05 வாகன விபத்துக்களில் ஏற்பட்ட நட்டங்கள், இழப்பீட்டு நட்டம் கிடைக்கப் பெறாத ரூபா 208,416 கூட்டுப்பெறுமதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 104(4) இன் கீழ் நட்டங்கள் தொடர்பிலான இறுதி அறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டியதாக பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் கீழுள்ள 39 தொழில்நுட்ப ∴ கைத்தொழில் கல்லூரிகளில் 15 கல்லூரிகள் அமைந்துள்ள காணிகளின் உரித்து குறித்த கல்லூரிகளுக்கோ திணைக்களத்திற்கோ சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை தொழில்நுட்ப கல்வி சேவையின் உத்தியோகத்தர்களின் திணைக்களத்திற்குட்பட்ட பதவிகளை கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சேவையின் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றல்கள் உரிய நடைமுறைக்கமைய இடம்பெறாத காரணத்தினால் 09 கல்லூரிகளின் தகவல்களுக்கமைய 186 உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பாடநெறிகளை நடாத்துதல் தொடர்பிலான சிக்கல்கள்

(i) 2017-2019 ஆண்டுகளில் கசரங்க மற்றும் ஹோமாகம தொழில்நுட்ப கல்லூரிகளில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 10 பாடநெறிகளுக்காக நிரந்தர கல்விசார் பதவியணியொன்று இல்லாதிருந்தமை மற்றும் வெளிவாரி மதியுரையாளர்கள் குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திராமை போன்ற காரணங்களால் பாடநெறிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது.

(ii) பாடநெறிகளின் தரம் மற்றும் செயன்முறை பரீட்சைகளுக்காக அவசியமான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் கருவிகள் 19 வகையானவை தேவையாக உள்ள போதிலும் 6 கல்லூரிகளில் குறித்த வசதிகள் போதியளவில் காணப்படவில்லை.

(iii) பாடநெறிகளை நடாத்துவதற்கு போதியளவான வகுப்பறை வசதிகள் அவசியமான போதிலும் 07 தொழில்நுட்ப கல்லூரிகளில் உள்ள வகுப்பறை வசதிகள் போதியளவாக இல்லாதிருந்த நிலைமையொன்று காணப்படுகின்றது.

(iv) நுவரெலிய தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ்மொழி மூல பாடநெறிகளுக்கு அதிக கேள்வி நிலவிய போதிலும் அந்த மொழி மூலத்தின் பாடநெறிகள் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் பிரதேசத்திற்கு பொருந்தும் வகையில் விவசாய, விலங்கினம் போன்ற புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு கல்லூரிக்கு சொந்தமான நிலப்பரப்பு போதுமானதாக இல்லாதிருந்த நிலைமை காணப்பட்டது.

(உ) பணம் விடுவிப்பதற்கான அளவீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அளவீடுகளின் அடிப்படையில் துறைசார் திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் 9 உத்தியோகத்தர்களுக்கு ரூபா

1,095,994 ஆன கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் முக்கியமான பணிகள் செலவான பயிற்றுவிப்பாளர்களின் தொழில்சார் இயலுமையை அபிவிருத்தி செய்தல், தரத்துடனான தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல், புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல் அல்லது திருத்தியமைத்தல், தொழில்சார் ஆசிரியர்களின் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல், தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு தேவையான உபகரணங்களை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளின் கட்டமைப்பினை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் நிலவியது.

4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 16 தொழில்நுட்ப ∴ கைத்தொழில் கல்லூரிகளுக்காக பேராசிரியர்கள் இருவர் மற்றும் பதிவாளர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அதற்காக எந்தவொரு பேராசிரியரோ பதிவாளரோ இணைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனைத்து கல்லூரிகளுக்கும் ஒரு கைவினை காட்சியாளர் எனும் படியாக 39 பேர் இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் காலி மற்றும் வறக்காப்பொல கல்லூரிகளில் மாத்திரம் உண்மையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

டபிள்யூ.எம்.பி.ஏ.பொன்சேகா,
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக.

பிரதி - பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்.

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

விசேட குறிகாட்டி	குறிகாட்டிகளின் கணிப்பீடு	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதம் சார்பாக உண்மையான வெளியீடு (மூ)			
		(100-90)	(75-89)	(50- 74)	குறிப்புக்கள்
பாடநெறி நிறைவு சதவீதம	மாணவர் பாடநெறியை நிறைவு செய்தல் x 100 பாடநெறிக்குச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கை		√		
திறன் பயன்பாட்டு சதவீதம்	சரியான மாணவர் எண்ணிக்கை x 100 மாணவர் பயிற்சிக்கான கொள்ளளவு	√			
சேர்க்கை (உட்கொள்ளல்) சதவீதம்	சேர்ந்த மாணவர் எண்ணிக்கை x 100 விண்ணப்பங்களின் எண்ணிக்கை			√	விண்ணப்பங்களிலிருந்து 70 சதவீத சேர்க்கை
பயிற்சியாளருக்கான செலவு (ரூபா)	ஆண்டுக்கான மொத்தமாக செலவான மீண்டெழும் செலவு ஆண்டுக்கான மொத்த மாணவர் எண்ணிக்கை		ரூ. 44080.00		
வேலை வாய்ப்பு சதவீதம்	தொழில் கிடைத்த எண்ணிக்கை x 100 சித்தியடைந்த எண்ணிக்கை			√	
மொத்த செலவில் சுய-உருவாக்கப்பட்ட நிதிகள்	மாணவரிடமிருந்து கிடைத்த பாடநெறிக் கட்டணம் x 100 ஆண்டுக்கான மொத்த செலவு				ஏறத்தாழ 3 சதவீதம்
விரிவுரையாளர் திறன் அடிப்படையிலான கிடைக்கும் தன்மை	விரிவுரையாளர் கிடைக்கப்பெறுதன்மை x 100 தேவையான விரிவுரையாளர்கள் தொகை				43 சதவீதம்
அனுமதியளிக்கப்பட்ட ஆளணி அடிப்படையில் விரிவுரையாளர் திறன்	விரிவுரையாளர் கிடைக்கப்பெறுதன்மை x 100 அனுமதியளிக்கப்பட்ட ஆளணி				46 சதவீதம்

அத்தியாயம் 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

நோக்க குறிக்கோள்கள்	இலக்குகள்	சாதனைகளின் குறிக்கோள்கள்	இன்றுவரையான சாதனையின் முன்னேற்றம்		
			0மூ - 49மூ	50மூ - 74மூ	75மூ - 100மூ
4.1.2	இலக்கு 4.4: 2030க்குள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்திறன்கள் ஆகியவற்றைக் கொண்ட தேவையான திறன்கள கொண்ட,இளைஞர்கள் மற்றும் வயதுவந்தோரின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு, ஒழுக்கமான வேலைகள் மற்றும் தொழில்முனைவு என்பவற்றில் கணிசமாக அதிகரித்தல்	ஆண்டுதோறும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை		70 சதவீத சேர்க்கை பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து	
4.1.4	இலக்கு 4.உ: 2030க்குள், குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் சிறிய தீவு வளரும் நாடுகளில் உள்ள தகுதியான ஆசிரியர்களின் எண்ணிக்கையை, சர்வதேச ஒத்துழைப்பு மூலம் குறிப்பாக வளரும் நாடுகளில் ஆசிரியர் பயிற்சி மூலமாக கணிசமாக அதிகரித்தல்	திறன்விருத்தி பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	√		
4.2.2	இலக்கு 4.3: 2030க்குள், அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருளாதாச் சிக்கன மற்றும் தரத்தில் சமமான அணுகலை பல்கலைக்கழகம் உட்பட தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலை கல்வி உறுதி செய்தல்	கற்கைகளில் சேரும் பெண் மாணவர்களின் எண்ணிக்கை	√ 45 சதவீத பெண் மாணவர்கள் அனுமதி		
4.2.3	இலக்கு 4.5: 2030க்குள், அனைத்து நிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சியை, குறைபாடுகள், பழங்குடி மக்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகள் ஆகியோருக்கு கல்வியில் பாலின வேறுபாடுகளை நீக்கி, சமமான அணுகலை உறுதிசெய்தல்	• வுஏநுவு படிப்புகளில் சேருவதற்கு சம வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளமை. • மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான வசதிகள் உள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை • பொருளாதார ரீதியாக ஆரோக்கியமற்ற குடும்பங்களுக்கு மாணவர்களின் உதவித்தொகை மற்றும் சலுகைகள்		சராசரியாக √	

5.1.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகளும் சவால்களும்

அடைவுகள்

- வருடாந்த அனுமதியை அதிகரிப்பதற்காக தேவைப்படும் பௌதீக வளங்கள் பெறும்பொருட்டு வரவுசெலவுத்திட்டம் 2021 ஊடாக நிதியைப் பெறக்கூடியதாயிருந்தமை
- கோவிட் 19 ன் சவால்களைச் சந்திப்பதற்காக நிகழ்நிலை மற்றும் கலவைமுறைகளில் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டமை
- மாணவர் நலன்வசதிகளாக, அடையாளங்காணப்பட்டதொழிற்கற்கைகளில் புலமைப்பரிசில் மற்றும் பருவகாலசீட்டுக்கள் வழங்கியமை

சவால்கள்

- சமூக காரணிகள் காரணமாக உருக்கிணைப்பு, மேசன், மரவேலை,போன்ற தொழில் கற்கைகளுக்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே ஈர்க்கப்படுகினறனர்.
- மூன்றாம் நிலை தொழிற்தகுதி மற்றும் பயிற்சிக் கற்கைகளில் பெண் மாணவர்களின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது.
- விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறிகள் என்பன காணப்படாதுள்ளது.
- அடையாளங்காணப்பட்டதுறைகளில் உள்ள கல்விசார் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை தொழிற்கல்வியின் தரத்தில் எதிர்மறை விளைவுகளை நேரடியாக ஏற்படுத்துகின்றது.
- நவீன தொழிநுட்பம் மற்றும் தொழிற்சாலை அநுபவம் என்பவற்றில் பயிற்றுவிப்பாளர்கள் தம்மை மேம்படுத்தாமை

அத்தியாயம் 05

மனிதவள விபரம்

.

6.1. ஆளணி முகாமைத்துவம்

வகை	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள் அல்லது மிகை
முதுநிலை	1315	586	727
மூன்றாம் நிலை	144	55	89
இரண்டாம் நிலை	1193	887	385
முதலாம் நிலை	1174	798	372

6.1.1 திணைக்கள ஆளணியின் பொதுநிலை – 31.12.3021

வகை	அனுமதியளிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள்
கல்விசார்	1345	676	669
கல்விசாரா	2525	1740	775
மொத்தம்	3870	2287	1501

6.1.2 செயலாற்றுகை மீதான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களின் விளைவு

ஆளணிப்பற்றாக்குறை ஏறத்தாழ 50 சதவீதமாக இருக்கின்றபோதிலும், தற்போது, வருகை அடிப்படையிலான உத்தியோகத்தரைப் பாவித்து பயிற்சி வழங்குகை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொழில் பெறக்கூடிய தொழிற்றுறைகளில் அடையாளம் காணப்பட்ட 135 வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் தொழிற்கல்வியின் தரத்தையும் கல்லூரிகளின் தரத்தையும் மேம்படுத்தும்.

6.2. மனிதவள அபிவிருத்தியின் செயலாற்றுகை 2021

கோவிட் -19 காரணமாகத் திட்டமிட்டபடி இயலுமைவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தமுடியாமல் போயுள்ளது. உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை, பெரும்பாலும் நிகழ்நிலை பயன்முறையினூடாகவே நடாத்தக்கூடியதாயிருந்தது.

6.2.1 நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் -2021

இல	நிகழ்ச்சித்திட்டம்	பயிற்சியளிக்கப்பட்ட அலுவலர் தொகை	நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சித்திட்டதன்மை (உள்நாடு, வெளிநாடு)	விளைவு
				உள்நாடு	வெளிநாடு		
1	வாகன தொழில்நுட்பவல்லுநர்களுக்கான பயிற்சியாளரின் பயிற்சி	2	2021.08.23 - 2021.08.27	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
2	வளிச்சீராக்கம் மற்றும் குளிர்பதனம் தொழிற் துறைக்கான பயிற்சியாளரின் பயிற்சி.	2	2021.08.30 - 2021.09.03	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
3	ஆட்டோமொபைல் துறையில் பயிற்சியாளர்களுக்கான புதிய தொழில்நுட்பதொழில்துறை வெளிப்பாடு. (ஆட்டோமொபைல் எலக்ட்ரிக்கல் மற்றும் ஆட்டோமொபைல் மெக்கானிக்ஸ்.)	எல்லாக் கல்லுஎல்லாக் கல்லூரிகளிலும்	2021.09.14	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
4	ஆட்டோமொபைல் துறையில் பயிற்சியாளர்களுக்கான புதிய தொழில்நுட்ப முன்னேற்றம்.		2021.09.22 - 2021.09.25	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
5	வளிச்சீராக்கம் மற்றும் குளிர்பதனம் தொழிற் துறைக்கான புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் (2வது பயிற்சி அமர்வு).		2021.09.29 - 2021.10.02	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
6	தொழில் - நிறுவன ஈடுபாடு மற்றும் கல்வியாளர்கள் நிகழ்நிலை உச்சிமாநாடு (ஜ2நுள) 2021. (தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல்)	3	2021.10.27 - 2021.10.28	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
7	வளரும் நாடுகளில் உள்ள வுஏநுவு ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு.	2	2021.11.03 - 2021.11.16	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
8	மெய்நிகர் வுஏநுவு ஐப் பயன்படுத்தி வளிச்சீராக்கம் மற்றும் குளிர்பதனப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி.	10	2021.12.06 - 2021.12.09	நிகர்நிலை		உள்நாடு	திறன் மேம்பட்டமை
9	தலைமை அலுவலகத்தில் இருப்புக்களை கையாள்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்	30	2021.04.28			உள்நாடு	அலுவலர்களின் வாண்மை விருத்தி
10	தலைமை அலுவலகத்தில் கோப்பு முகாமைத்துவ தொகுதிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் (1வது குழு)	30	2021.04.29	ரூபா..5,100.00		உள்நாடு	அலுவலர்களின் வாண்மை விருத்தி
11	தலைமை அலுவலகத்தில் முகாமைத்துவ தொகுதிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். (2வது குழு)	30	2021.04.30	ரூபா.4,400.00		உள்நாடு	அலுவலர்களின் வாண்மை விருத்தி
12	மின்சார தொழிற்றுறையில் பயிற்சியாளர்களின் பயிற்சி.	9	2021.07.28 - 2021.08.01			உள்நாடு	திறன் மேம்பட்டமை
13	தொழிநுட்பவியல் மற்றும் தொழிநுட்பக் கல்லூரிகளில் உள்ள தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	55	2021.11.19	ரூபா.40,520.00		உள்நாடு	திறன் மேம்பட்டமை
14	தலைமை அலுவலகத்தில் கோப்பு முகாமைத்துவ தொகுதிகளுக்கானவிழிப்புணர்வு நிகழ்ச்சிகள். (3வது குழு)	30	2021.11.25	ரூபா.4,814.00		உள்நாடு	அலுவலர்களின் வாண்மை விருத்தி
15	யுடுருஆநுஒ இன் ஒத்துழைப்புடன் அலுமினியம் தொழிற்றுறையில் பயிற்றுவிப்பாளர் மேம்படுத்தல் திட்டம் (வரகாபொல வுஊ இன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது)	12	2021.11.27 - 2021.11.28			உள்நாடு	திறன் மேம்பட்டமை
16	நிர்வாகப்பிரிவு அலுவலர்களுக்கான தனிநபர் கோப்புகளைப் பராமரித்தல் மற்றும் ஒய்வூதியம் தயாரித்தல் தொடர்பான பயிற்சித் திட்டம்	30-35	05 நாட்கள்	ரூபா..51,650.00		உள்நாடு	தனிநபர் கோவைகளின் பராமரிப்பு மற்றும் ஓய்வூதியம் தயாரித்தல்
17	புதிய முகாமைத்துவ சேவை மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சித் திட்டம்	30-35	05 நாட்கள்	ரூபா..59,315.00		உள்நாடு	பொதுச் சேவைகள் பற்றிய அடிப்படைப் பயிற்சி
18	தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பைத் தொடரும் அலுவலர்களுக்கான பாடநெறி கட்டணம் செலுத்துதல்	61		ரூபா..6,408,050.00		உள்நாடு	

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்)வர்த்தக முற்பணக் கணக்குகள்(	பொருத்தமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.6	ஏனைய	இணக்கமானது		
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை	இணக்கமானது		

	புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் *(CIGAS)* தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் *(GA – N20)* பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணக்கமானது		
3.4	*2014.05.11* திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல *.171/2004* இன் படி அரசு ஊதிய மென்பொருள்	இணக்கமானது		

	தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை			
4	வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வசெதி திணைக்களத்தில் *(NBD)* உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி.பி. *134 (2)* டி.எம்.ஏ */ 1-2019* படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த	இணக்கமானது		

	பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்			
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் *2018* இன் *19*ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு *40 (4)* இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் *134 (3)* நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிளம்ஏ *1-2019* சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது *04* கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது	02.06.2020 ம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் தினைக்களத்தின் கடிதத்திற்கமைய, 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டங்களுக்குப் பதில் 02 கூட்டங்களே கோவிட் காரணமாக நடைபெற்றது.	

8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. *01/2017*, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணக்கமற்றது	கோவிட் காரணமாக தாமதம் ஆகியுள்ளது	2021 இற்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் *13* ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. *05/2016* இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி *772*இன் படி கழிக்கப்பட்ட	இணக்கமானது		

	பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது			
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி *103,104,109* மற்றும் *110* இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	*2016.12.29* திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. *2016/30* இன் பத்தி *3.1* இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கமற்றது	பரிசோதனைச் சபை நியமிக்கப்பட்டுள்ள போதும் கோவிட் காரணமாகத் தாமதம்	2021 இற்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப் படுகின்றது
9.6	குத்தகை வாகனங்களின்	இணக்கமானது		

	உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.			
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது		
11.2	நி.பி *.94 (1)* இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			

12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமற்றது	02 அலுவலர்களின் பதவி வெறிதாக்கம்	சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி *571* பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது	31.12.2021இல் காலாவதியான டெபாசிட்கள் இல்லை	
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி. *371* இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல். அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி. *371* இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால	இணக்கமானது		

	வழங்கல்			
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணக்கமானது		
15.3	நி.பி *176* இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	*20.09.2017* தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. *04/2017* இன் படி அனைத்து	இணக்கமானது		

	அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.			
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்.	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் *8* மற்றும் *10* பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. *05/2008* மற்றும் *05/2018 (I)* இன் படி பிரசைகள் பட்டயம்	இணக்கமற்றது	கற்கையொன்று முன்னேற்றத்தில் உள்ளது	2021 இற்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது

	/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.			
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமற்றது	கற்கையொன்று முன்னேற்றத்தில் உள்ளது	2021 இற்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல .02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல்	இணக்கமானது		

	கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.			
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		